உ

கடவுள் துணை.

ஆடியீட்டு

# மோரீஸ் மணிலாக்கோட்டை
# அலங்காரச் சிந்து.

THE REGISTRAR
10 APR 1915
MADRAS

விளம்பரம்
இப்புஸ்தகம் இவ்வொரு நேயர்களிடமும்
அவசியமிருக்கவேண்டும்.



முதல்பதிப்பு காப்பிகள், 1000
இதன் விலை, 0 0 6
1915

இஃது பிராஞ்சு இலாக்கா நெட்டப்பாக்கத்திலிருக்கும்
மகா-ா-ா-ஸ்ரீ

**மு. நாராயணசாமி கவுண்டர்**

இயற்றியதை

நெல்லிக்குப்பம்.

R. வரதைய நாயுடு அவர்களது

ஸ்ரீ-வாலக்ஷ்மி விலாஸம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

உ

புதிதாய் வெளிவந்திருக்கும்

# அச்சுதாஸ் கீர்த்தனை

## 2-ம்பாகம் விலை 0-6-0.

வி. பி. சார்ஜி 0—2—0

கா. ந. குப்புசாமி செட்டியார்,

புக்ஷாப்பு,

திருவண்ணாமலை.

இச்சிந்தை என் உத்தரவின்றி அச்சிடத்துணியார்கள் நற்குலத்திற் பிறந்தோர். இஙனம் R. வரதய்ய நாயுடு.

உ

கடவுள் துணை.

## ஆடியீட்டு கொட்டையின்

# அலங்காரச் சிந்து.

### விநாயகர் துதி.

நீரும் நிலவளமும் நிறைந்ததொரு குடிவளமும்
பேருமுகமாக யிருக்கையிலே—மேருவைப்போல்
காருசம்பா கேழ்வரகு கைவிடுத்து ஆடிகொட்டை
தாருமாராகு திப்போ தந்திமுகா வந்தருளே.

### தெம்மாங்கு

ஆண்

ஆடியீட்டுகொட்டையினா லதிககடனாச்சுதடி
தேடிவைத்தபொருளையெந்தன் தேவியரே தெருவிலிட்டேன்
அடிஅடியே பாடுபட்டும் பலனில்லையே
பலன்கொடுத்தும் விலையில்லையே
ஆடுதற்கும் மாடில்லையே
ஆடினாலும் சுகமில்லையே
அடி காலமெல்லாம் வும்மால்தாண்டி
கணக்கில்லாத கடன்பட்டேண்டி நன்னானே

பெண்

பட்டகடனென்றாலே பாவிவந்ததென்றுசொன்னாய்
மூட்டபடித்திட்டாயே மூடமேநீ யென்னசொன்னீர்
அய்யா யேட்டிலுள்ளதை எடுத்துபாரு
யென்கணவா வுனக்கேன்சோரு
காட்டுவேனா கிரிப்பில்சோரு
கற்வமேனோ மாதர்ச்சோரு
அய்யா மாலைகழுத்தில் மாட்டினேனோ
மடையபுத்தி யுனக்கேன்மாமா நன்னானே

ஆண்

மாமனுனக்கல்லவா மாமருந்தே நீயல்லவா
ஓமலரவேநின்றேன் உத்தமியே உறைபேன்கேளும்
அடி பத்துகாணி பறந்துபோட்டேன்
பாச்சலுக்கும் பம்புபோட்டேன்
கொத்தாமலே குமறப்போட்டேன்
கூடுமட்டும் பொரிக்கிபார்த்தேன்
அடி பாதிகரை யேத்திவிட்டேன்
பள்ளத்தாக்கில் நாத்துவிட்டேன் நன்னானே

பெண்

ஏத்தினதும்பெரிதா யேளனமா சொல்லவந்தீர்
நாத்தமெடுத்திடாதா நானொருத்தியில்லாவிட்டால்

அய்யா ஆணாய்பிரந்தும் அறிவுயேது
ஆகா யெங்ககற்றாய்சுது
வீணாபழி வினையுன்மீது
வேகுதய்யா வயிரிப்போது
அய்யா மாலையிட்டநாளாப்பாவி
மண்ணைதள்ளவிட்டாய்காவி கண்ணானே

ஆண்

பட்டகடனாயிரம் பழையகடனோராயிரம்
வட்டிமுதலும்பார்த்தால் வருகுமடிஐயாயிரம்

அடி நாட்டுக்கோட்டையார் பழக்கந்தாண்டி
நடத்தையரிந்து கொடுத்தார்வேண்டி
எட்டுபோக்கிகை யெழுத்துதாண்டி
எழுதினதண்டு மாண்டுதாண்டி
அடி குருக்கயிருந்த தோஷந்தானே
அருக்குதிப்போ குடும்பமானே கண்ணானே

பெண்

ஐயோபாவியெனக்கு அய்யாயிரம்வைத்திட்டாயே
கொய்யாப்பழமென்றெண்ணி கொட்டிகொட்டிதர்றிட்டாயோ

அய்யா இருக்கும்சொத்தை யெனக்குமாத்து
யிருந்தால்பின்னால் கொடுப்போம்சேர்த்து
சரக்குஅடிக்கும் தருணம்பார்த்து
சாதனமாய்முடிப்பாய் கோர்த்து
அய்யா குழந்தைமுகத்தை யேறபாரு
குடும்பத்திற்கு நல்லபேரு கண்ணானே

ஆண்

தங்கநகையைவைத்தேன் தாலியுருதானும்வைத்தேன்
பங்கம் அதனைச்சொல்ல பாவையரே வெளியிடாதே

அடி மங்கையரே மணியும்போச்சு
மலிந்தபொருளும் குறைந்துபோச்சு
யெங்கும்குழப்பம் யிதுவேபேச்சு
யேண்டியென்மேல் வெறுப்பம் சீசீ
அடி யினிபிழைப்ப தருமைமாதே
யெனக்குயோசனை சொல்வாய்மானே கண்ணானே

பெண்

வாறண்டு சப்திகளும் வந்துகொண்டிருந்ததினால்
ஊறண்டிருந்த நஞ்சை ஒருகாணியும் போச்சிதய்யோ

அய்யா பேரும்ஊரும்யில்லை அய்யா
பிறந்தயிடமேபோறேனய்யா
காருசம்பா கடந்தானய்யா
காலைநாளை பயணமய்யா

அய்யா மாட்டைவித்தாய் மனேயைவித்தாய்
மாணிக்கம்போல் வீட்டைவித்தாய் நன்னுனே

ஆண்

பையன் தலையெடுத்தான் பலனையெல்லாம் கைகொடுத்தான்
தைய்யலரே பெண்பிறந்து தவிக்கிறண்டி சௌக்கியம்போய்

அடி கையிலிருந்த பொருளும்போச்சு
கடனே தலைமேலேறலாச்சு
செய்யும்தொழிலும் சிதறிபோச்சு
சீசீ என்னகாலமாச்சி
அடி பிள்ளைகுருப்பை போட்டுபார்த்தார்
வள்ளுவனுர் கிறகம்பேர்த்தார் நன்னுனே

பெண்

கோட்டில் வழக்கேனய்யா கோமணமு மீராதய்யா
நாட்டுகோட்டையாரிடம் நாலுவட்டி யுமக்கேனய்யா

அய்யா நல்லகுடும்பம் நசிந்துபோமே
நமனைப்போல வருவாபாமே
சல்விசல்வியாயேருமாமே
சனியனைப்போல் பிடிப்பாராமே
அய்யா ஆயிரமென்பது அசலுதானே
அதற்குவட்டி அயினூர்தானே நன்னுனே

ஆண்

ஜாமீனுயிருந்ததோஷம் சனியனைப்போல் வந்ததடி
பூமிபொருளைவித்தும் போதலியே பொருளெனக்கு

அடி முன்னேர்பொருளும் மூழ்கிபோச்சு
மூவாயிறமும்கடன மேலாச்சு
சொன்னசொல்லும் தவிரிபோச்சு
சொத்தைமாத்த சுலபமாச்சு
அடி வைக்கலிடம் போய்வாரேண்டி
தக்கயோசனை சொல்வாரோடி நன்னுனே

பெண்

வைக்கல்கோற்ட்டரினேர் வாழ்ந்தவரா ருலகமதில்
செக்கு அறைப்பதுபோல் கக்கென்பாரே கைதனிலே

அய்யா சம்மன்சார்வு படிதானென்பார்
சாக்ஷிபடி சப்தியென்பார்
நம்மால்இனிமேல்முடியாதென்பார்
நானூரிருந்தால் பாருமென்பார்
அய்யா யீறங்கி யெட்டிபோட்டேனென்பார்
யிதற்குபீசுகட்டுயென்பார் நன்னுனே

ஆண்

கொட்டை அடித்துசாப்பு கொலுசுடனே போடுறண்டி
யெட்டுபவுனில் போட்டுயிட்டழகு பார்க்குறண்டி

அடி பட்டகடனும் பைசலாகும்
பலனும்நல்ல பலிப்பதாகும்
யிட்டபொருளும் யிரவலாகும்
யிதுவெலாவுமக்கழகதாகும்
அடி ஆனைப்பளிவாங்கிதாறேன்
அழகுள்ளபசுந்தேனேவாரேன் கன்னேனே

பெண்

ஆனைப்பளிவேண்டாம் அழகுள்ளசேலைவேண்டாம்
மானம்போகுதேயிப்போ மாத்திகட்டசேலையுண்டா
அய்யா காப்புகொலுசு யெனக்கேனய்யா
கழுத்தில்மாலை பொருக்காதய்யா
நாப்புகாட்டி நகைக்காதய்யா
நாடுமாரி வருவாளய்யா
அய்யா அவளுக்கிட்டு அழகுபாரும்
கொவளைமூஞ்சியிடத்தில்நீரும் நன்னேனே

ஆண்

ஆசைபாசவுன்மேலே அதிகமடி எந்தனுக்கு
ஓசைமணியே யுன்னால் ஓமலாலேநின்றனடி
அடி மோசமென்னசெய்யவேண்டாம்
மோடியென்மேலுனக்குவேண்டாம்
காசிபணத்தை பார்க்கவேண்டாம்
கலங்கிநீயும் அழுகவேண்டாம்
அடி பொருக்கும்கொட்டை மூளைத்துவிட்டது
பூவையரே மனதுகெட்டது நன்னேனே

பெண்

புதுவையிலென்னவிலை போடுறார்கள் பாறம்விலை
அதுவுமக்கு சம்மதமா அடித்துமூட்டையேத்துமய்யா
அய்யா பத்துகுண்டு பாறமென்பார்
பயரீறந்தான் தள்ளுமென்பார்
மொத்தருத்தல் முன்னூரென்பார்
முனப்புதள்ளி போடுமென்பார்
அய்யா ஊருவிலை நாலஞ்சென்பார்
ஒருவாரம்செல்லும் தவணையென்பார் நன்னேனே

ஆண்

பண்ணுரொட்டியளவு பலத்தமண்டி படியளவு
கண்ணன் வடிவேல்கந்தன் கம்பனியார் தான்தறகு
அடி பாடி படியாலளப்பாரோடி
பலருலும்நான் கேழ்வியோடி
கோடியானாலும் குறையாதோடி
கோமளமே பயமேதடி
அடி அளவுபோல பணமும்கொடுப்பார்
அதற்குமேலே தரவுங்கொடுப்பார் நன்னேனே

பெண்

பண்ணுரொட்டியளவைபார்த்தது ண்டு படியளவை
யெண்ணும்போதே படியை யிரக்கிடுவாரென் கணவா

அய்யா ஊருவிலைபத்துஎன்பார்
உரிதியாக எட்டேஎன்பார்
ஆறுபடி அளப்பேனென்பார்
ஆசைகாட்டி அளத்துமென்பார்
அய்யா மோசக்காற கும்பலய்யா
முனந்துபேச லாகாதய்யா நன்னானே

ஆண்

வாழ்வரசேவளவனாரு வால்மறக்கா அளவைபாரு
தாழ்வுவொன்றும் வராதடி தய்யலரே நீ கேளடி
அடி தரகரென்றால் தரகர்தானே
தருந்ததரகர் அவர்கள்தானே
கறத்தைகட்டி அளக்கார்மானே
கணக்கைபோலே கொடுப்பார்தேனே
அடி அதிகஆசை யவருக்கேது
அனுகேனும் அவர்செய்யார்சூது நன்னானே

பெண்

பார்த்தால் முடியாதய்யா பட்டகடன்தொலையாதய்யா
சேர்த்தாகிலும் கொடுப்பமென்று சீக்கிறமாமுடியாதிப்போ
அய்யா வெள்ளம்பாதி கொண்டுபோச்சே
வினையாவந்து மூண்டுபோச்சே
கள்ளனாலே கலக்கமாச்சே
கன்னம்கருப்பாய் கருகிபோச்சே
அய்யா யேத்துமதியாரெடுக்குறாராம்
யெடுத்துமூட்டைவை அடுக்குறாராம் நன்னானே

ஆண்

எத்துமதியுமில்லை யெறக்குமதிதானுமில்லை
கேத்தொருயெம்டன்கப்பல் நிலைகலங்கவிட்டதாமே
அடி பார்த்திருப்பதில் பலந்தானேது
பயிரைவுறளிலரையிப்போது
சேத்தில்போடுவோம் அதுதப்பாது
சிவன்விட்டவழி செல்வாய்மாது
அடி நல்லகாலம் வருமென்றானே
நாராயணசாமிதானே நன்னானே

பெண்

தாதுகருப்பும் பார்த்தேன் தாறணவெள்ளம்பார்த்தேன்
யேது ஆனந்தாவைப்போலிதுவரைக்கும் கண்டதில்லை
அய்யா முந்திதொழில் முடக்கமாச்சே
மூணுமாதமாய் இடுக்கமாச்சே
அந்தியானாலடக்கமாச்சே
ஆதிசிவன்செயலிதாச்சே
அய்யா ஆருமுலகிலரிகுவாரே
நாரர்யணசாமிபேரே நன்னானே

900 008

## தொண்டிச்சிந்து,

மானே மாகதமே ஆனந்தாவில் - மட்டுமிதமில்லையே கொட்டினமழை · மேகமென ஆ முதலா யிதுவரைக்கும் -தேவியே வந்தாணடி பாவிசனியன் - பேனேயிவ்வருட,ந்திலே மொழுக்கன்கொட்டை - யோராளமாகவே குவித்திட்டதே - பாழும்விலைகுறைந்து கொட்டைதனை பட்டறைபோட்டுக்கும்மன் - தட்டால்மூடியே - காவலிருந்தவரும் மழையினுல் கம்பியெடுத்துவோட்டம் பிடித்தவரும் - நாலுமாதகாலம்பார்த்தார் அய்யோ - நாத்தமெடுத்திட்டதே சேத்தில்கிடந்து - அடித்துமே யாடுவோரும் சிலர் அரைத்துநொருக்கிசேத்தி லழுத்துவாரும்-பாத்திகட்டி குழப்புவாரும்-சிலர் சேத்தோடுமூது நாத்தைநடுகுவாரும்உரளில்போட்டாடுவாரும்-சிலர் உருட்டிபின் அடிகொண்டு நொருக்குவாரும்-வயல்கொண்டுயிறைத்திடுவார் சிலர் வருவோடுதன்னில்வைத்து வருத்திடுவார்-விரைவித்துபோடுமென்பார்-சிலர் விஞனவேலையது வாணும்போமென்பார் வண்டியிலேத்திடுவார்-சிலர் வாரம்தவணைவைத்து வாங்கிடுவார் - பாதிபொருக்கிறோரும் சிலர்- பாவியம்போல் முளைக்க விடுத்தவரும் வாயில்டித்துக்கொள்வார் - சிலர் வாரம்பிரித்துவீட்டி லுரித்திடுவார் - குத்துகுத்தாய் எடுத்துக்கொள்வார் - அவரிட கோமணத்தில்வைத்து கட்டி கொரித்திடுவார் — அம்மியிலறைத்திடுவார்-பெண்கள் அதனையெடுத்துகூட்டு கொழும்பிடுவார் - யிப்படி யிருக்கையிலே - அவரவர் யெப்படி கடத்தேருவார் கற்புள்ளமாதே—தந்தோம் தனதனனு.

## கும்மி.

ஆண்
அம்மையாரே ஓடிவாருங்கடி நம
தானைமுகவனை பாருங்கடி
கொம்மையாளே குழலூதுங்கடி மொழுக்கன்
கொட்டை பொருக்கவே வாருங்கடி

பெண்
கொட்டைபொறுக்க முடியாதய்யா களை
கொத்தாமலங்கே கிடக்குதய்யா
யெட்டுநாள்சென்றுமே வாரோமய்யா வந்தா
யென்னகூலி போட்டு தந்திடுவீர்

ஆண்
கூலிக்குவொன்றும் குறவுமில்லை தாயே
கொட்டைகொடுக்கிறேன் திட்டமாக
தாவி தழைக்கவேணுமம்மா மண்ணை
தள்ளிகரையேத்தும் தாய்மார்களே

பெண்
அம்மாவென்றாலு முடியாதண்ணே வாடஞ்
சம்பாகளைவந்து வாட்டுதிப்போ

சும்மாயிருந்தாலும் வஞ்சனையா ஒரு
சூதுமரியாத சோதரனே

ஆண் தங்கையரேமுகம் பாருமம்மா இந்த
தருணத்தில்வந்து வுதவுமம்மா
பங்கம்போகுதம்மா உங்களாலே பற
மேஸ்வரிபோலவே வாருமம்மா

பெண் அம்மாவென்றாலும் ஆகாதண்ணே சம்பு
ஆயலோட்டிமிது காலமண்ணே
நம்மால்முடியாது ஞாயத்போனால் மரு
நாளில் வருகிறேனல்லதண்ணே

ஆண் மாமன்மகளே யென்மாமியாரே சொந்த
மைத்துனன்தேவியாள் தங்கையரே
பூமன்மகளே பொரிக்கிதந்தீரானால் உம்மை
போற்றுகிறேன் மலர் சாற்றுகிறேன்

பெண் ஐயோ கைதனை யெடுக்கவேண்டா மிப்போ
ஆகாது என்னைமரிக்கவேண்டாம்
கையிலேகாசி தரவேணும் கொட்டை
காணும்படியா தருகவேணும்

கோல் மட்டுமிதமில்லை கொட்டையம்மா யிந்த
மாதமெல்லாம் மழைபேயுதம்மா
யிட்டபலனெல்லாம் யேமாத்திவிட்டதே
யேழைமேலிறக்க யேத்துமம்மா

பெண் கேவறருப்பு கிடக்குதங்கே பங்கு
வேறேயருத்து கிடக்குதிங்கே
ஓவரானபின்பு வாரோமய்யா ஒரு
வாரம் தவணையும் சொல்லுமய்யா

கோல் தவணைக்கழிந்து நீ வாறதெப்போ மண்ணை
தள்ளிபொறிக்கி தருவதெப்போ
புவனத்தில்யானும் பிழைப்பதெப்போ தாயே
பொரிக்கிகறையினி சேர்வதெப்போ

பெண் கம்பருத்தால் கலமாகிடுமே யிந்த
காலத்திலேகஞ்சி வார்த்திடுமே
வெம்பியழுகாதே தம்பியரே யிந்த
வேளைபோனால் நாளைவாரோமென்பார்

அல்லியாரே ஓடிவாருங்கடி யிவன்
நல்லவன்தாண்டி சொல்லைக்காரன்
யில்லையென்னுமை தருகுவானடி யிவன்
யேழைமுகம் பார்க்குமீசனடி

உழக்குழியை பரித்திடுவார் கொட்டி
மேலேகொடியை பறப்பிடுவார்
தாழக்கிடக்குதே பிள்ளையென்று அதின்
மேலேகிடத்துசார் பாருங்கடி

பிள்ளையையெடுத்திடும் குட்டிகளை கையால்
மெள்ளஅழைத்துமே விட்டிடுவார்

பள்ளத்தில்போட்டிடுங் கொட்டையெல்லாம் வாரி
இட்டநகுத்துரார் பாருங்கடி

கதையுள்ளபாடம் படிக்கின்றாரே நல்ல
சாந்தபுராணம்படிக்கின்றாரே
புதைத்திடும்கொட்டை புராணம்படிக்காமல்
போனதென்ன அடி ஞானப்பெண்ணே

யேத்தம்யிறைத்ததை பார்த்திருந்தும் அவன்
யெலும்புவொடிந்ததை பார்த்திருந்து
நேத்துயிருந்த நிலைமை அரியாமல்
நெக்கிக்கொண்டோடுறார் பக்கென்றுமே

அருமைபாடென்று அரிந்தனரா யிவர்
ஆலைக்கரும்புபோ லாடினரா
பெருங்கட்டிதள்ளி பிறட்டிவிட்டுபின்னால்
பிள்ளையைவிட்டு பொருக்கசொல்வார்

கொல்லையில்வந்து குனிந்தபோதே பாவி
நல்லதுயென்றுமே வல்லடிகள்
யெல்லைசந்தோரமாய் யெட்டுதோம் போயி
கொட்டிவருகிறார் பாருங்கடி

வருகும் கப்பலென்றுபார்த்திருப்பார் சிலர்
வாயைத்திரந்துமே பார்த்திருப்பார்
பெருகுமழையினால் கொட்டையெல்லாம் பிண
நாத்தமாநாருதே பேதையரே

யேறக்கொடுத்தாலும் போறதில்லை கரை
யேரினவர்களும் யாருமில்லை
வாறம்கொடுத்தபின் போயிடுவார் இவர்
வல்லடிவழக்கும் பேசிடுவார்

பாரிலுள்ளோர்களே பாருமய்யா நல்ல
பாரதம்சொல்கிறேன் கேளுமய்யா
யோரியாகின்று புலம்பிடவே மழை
வோயாமல்கொட்டுதே மாயமாக

ஆருயேரிகள் பெருக்கெடுத்து சில
ஆத்தோறம்புஞ்சையும் ஆத்தெடுத்து
சேருள்ளபூமியை கிண்டிகிண்டி வெகு
சேதமுமாகுதே பாதகரே

மோரீசுகொட்டை முளைத்தசய்யா கள்ளு
மொந்தைதூக்கவுடன் பட்டதய்யா
வாரீசுதாரரும் கூடிக்கொண்டு கள்ளை
வாங்கிக்குடிக்கிறார் பாருங்கடி

பட்டகடனுமிதினாலே புஞ்சை
பலன்கள்கெட்டது மிதினாலே
மொட்டைமொழுக்கனால் வந்ததடி பெரு
மோசமடி யெமபாசமடி

காலையில்போய் தொழில்வேலைசெய்யார் யினக்
காளையாகூடியே தான்திரிவார்

மாலைஐந்துமணி நேரமானல் கடை
மார்க்கத்திலேகண்ணால் பார்த்திடலாம்
பீடிசிகிரெட்டு தான்பிடிப்பார் சிறு
பிள்ளையெதிராக தான்பிடியார்
சோடிசோடியாக சாலைக்கடையோரம்
சொக்கவெடுக்குதே சுந்தரியே

ஆகமவேதத்தை யார்படித்தார் நல்ல
ஆருசாஸ்திரத்தை யார்படித்தார்
பாகனையமொழி மாதரிடத்தினில்
பாடம்படிக்குரார் பாருங்கடி

வாரரும் கொங்கை மடமயிலே நன்றாய்
வாசிக்குறேன்கேள் வனக்குயிலே
நாராயணசாமி நண்பனுரைத்திட்டான்
நாடகக்கும்மியை பாருங்கடி

## ஆனந்த களிப்பு.

சங்கரசங்கரசம்போ

எத்துமதிதாண்டி தெய்வம் கப்பலேராவிட்டாலிதற்கு
நாமென்னசெய்வம்
சாத்தும்புஷ்பமலர் கொய்வம் சர்வசாக்ஷாதி பகவானை
சகலருமுய்வோம் சங்கர

ஆதிசிவன்செயல்தாண்டி பேராசைகொண்டுபொருள்
தேடுவதேண்டி
சோதிவெளிச்சமீதாண்டி செல்வம் செல்லாமல்போகுமே
மல்லுனக்கேண்டி சங்கர

கள்ளஞானமுனக்கேண்டி யெல்லாம் கடவுள்செயலென்று
நடப்பாய் நீவேண்டி
வள்ளல்கொடுப்பார் வரந்தாண்டி பிறர்வசைமொழிகூராதே
அழகுமீதாண்டி சங்கர

தாயும்தந்தை குருதெய்வம் யிந்ததறணிமுழுதுமாளும்
தாய்நாடுதெய்வம்
சாயுங்காலம் பிறர்தெய்வம் பட்டைசாரூயம்முழு
பாட்டலெடுப்பதும் தெய்வம் சங்கர

அன்னியமாதர்மேல்ஆசை வைத்தோர் அந்தகர்
பாசத்திலகப்படும்மீசை
தன்னிகறில்லாதவேசை யிடம்தந்திவெள்ளைகிறந்தி
வந்திடகூசை சங்கர

வீண்காலம்நீபோக்கிடாதே நீயும் வீறியமாய்சண்டை
வீணில்போடாதே
பாங்கானமனை அகலாதே பறமபாகவதர்மனதை
நோகசெய்யாதே சங்கர

பிரர்மனை கைபிடிக்காதே பிடித்தால் பின்னால் நரகமென்று
பேசிடும்நூலே
அறனைதினமறவாதே திரு ஆனந்தவல்லியை
அரைவாயிப்போதே சங்க

ஓராருமுருகனய்யா தம்பி உள்ளபடியே—அந்த
வள்ளலைதேடு
நாராயணசாமிதன்னை அவனைநழுகவிடாமலே
வருகுவீர்பின்னே சங்கர

## புலம்பல்.

காப்புகொலுசு மோப்புபோட்ட கடியாறட்டிகைதானும்வைத்தேன் சங்
யிது காலமா காசிமாலையை வேசையிடம் நான்கொடுத்தேன் சங்கரா

முத்துமாலை றத்தினமோலை அத்தனையும் யீடுவைத்தேன் சங்கரா
நல்லகொத்துசரப்பள்ளிமாலை கோர்வைமணி தானும்வைத்தேன் சங்கரா

பாதசறம்தண்டைகொலுசை பாவிவிலைகூரினனே சங்கரா
யெந்தன் கோதையாள் தாலிவுருவை கொண்டுபோயி யீடுவைத்தேன் சங்

பித்தளைபெரியஅண்டா குத்துவிளக்கோடுவைத்தேன் சங்கரா
யித்தனையும் யீடுவைத்து பத்தலையே யெந்தனுக்கு சங்கரா

மொழுக்கன்கொட்டைவந்தநாளா மோசமில்லையெந்தனுக்கு சங்கரா
யிப்போ அழுக்குவாங்கிவிட்டதக்கு ஆரைநானினிநேருவேன் சங்கரா

யெட்டுவிரான்பட்டுசேலை யெனக்குவாணுமென்றுசொன்னுள் சங்கரா
யிப்போ கட்டவேதுணியில்லாமல் கண்கலங்கி நிற்குருளே சங்கரா

பாறம்விலையேறுமென்று ஆறுமாதம் காத்திருந்தேன் சங்கரா
யேரும்யேருமென்றுசொல்லி யேமாத்தியே விட்டதய்யோ சங்கரா

கும்பலாகொட்டையைக்கூட்டி கம்மன்தட்டால்மூடிவைத்தேன் சங்கரா
தும்பிக்கைபோலவேமழை துளைக்குதேயிதற்கென்செய்வேன் சங்கரா

அன்றுமுதல் நின்றதெல்லாம் பன்றிதின்றுபோச்சிதய்யோ சங்கரா
கன்றுபோலநின்றுநின்று கதரிநானழுகிறேனே சங்கரா

யேராதுவிலைதானென்று நாராயணசாமிசொன்னுன் சங்கரா
அதை மாராக நடந்ததாலே மாட்டிகொண்டுநிற்கிறேனே சங்கரா

## விருத்தம்.

இத்திசையில் பெருங்கரிப்பிலிருந்து பார்த்தேன்
யேரிவந்ததாறணத்தின் வெள்ளம்பார்த்தேன்
கொற்றவனுர் செயவீறக்கொடியும் பார்த்தேன்
கோமளமே யிதுவெல்லாம் பெரிதேயில்லை
சுத்திலுமேபோட்டுவிட்டேன் மொழுக்கன்கொட்டை
சூனியமாய்விட்டதய்யோ சுகமில்லாமலே
புத்திபுத்தியிதுவரைக்கும் போதும்போதும்
பூவையரே கனவிலுமே நினைக்கொண்ணுதே.

## வாழி-

திங்கள் செஞ்சடையோன் வாழத் திருமாலும் தேவர்வாழ்க
மங்களமறையோருன மாதவத்தோர்கள் வாழ்க
யெங்களையாளும் செங்கோல் யேந்தலும் வாழ்கவாழ்க
பொங்கறவணிந்தயீசன் பொன்னடி போற்றினேனே.

முற்றும்.